(உ) இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் அவர்களால் அவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோரப்பட்டிருக்கும் 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை இந்து முன்னணியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. அமைச்சரின் அறிக்கை.

கரும்பு விலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகள் மற்றும் கரும்பு உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து 8.5 சதம்

அல்லது அதற்குக் கீழ் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்புக்கு 1986—87 ஆம் ஆண்டுக்குக் குறைந்த பட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ. 200 (ரூபாய் இரு நூறு மட்டும்) என்று கொடுக்க சர்க்கரை ஆலைகளுக்குத் தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

8.5 சதம் சர்க்கரை கட்டுமானத்திற்கு மேல், கூடுதலாக கிடைக்கும் சர்க்கரை கட்டுமானம் ஒவ்வொரு 0.1 சதத்திற்கும் 1986—87 ஆம் ஆண்டிற்கு குவிண்டாலுக்கு 23.5294 பைசா வீதம் பிரிமியமாக வழங்கப்படும்.

மேற்படி ஆணையின்படியும், தமிழகத்தில் கரும்பு உற்பத்திப் பெருகி இருப்பதாலும், சராசரி 9.5 சதத்திற்கு மேலாக சர்க்கரை கட்டுமானம் இருப்பதாலும், கரும்பு விவசாயிகள் சராசரியாக டன்னுக்கு ரூ. 230க்கும் மேலாகவே பெறுவார்கள் என்பதை இப்பேரவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. தனியார் அலுவல்கள்.

தனித் தீர்மானம்.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. செம்மலை அவர்கள் 10—5—1986 அன்று மொழிந்த சேதுசமுத்திரத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அவசியம் குறித்த தனித் தீர்மானத்தின்மீது விவாதம் தொடரும். முதலில் திருமதி பா. வளர்மதி அவர்கள் பேசுவார்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே, ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) இப்படி ஒவ்வொன்றிலும் உறுப்பினர் அவர்கள் குறுக்கிடுவது சரியல்ல. முறையும் அல்ல. ஏற்கனவே தீர்மானம் மொழியப்பெற்று, விவாதம் நடைபெற்றிருக்கிறது. அதன்மீது தொடர்ந்து இன்றும் விவாதம் நடைபெறவிருக்கிறது. இதிலே என்ன விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது? தயவுசெய்து என்னோடு ஒத்துழையுங்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : ஒரு கருத்தைச் சொல்வதில் தவறு இல்லை. நான் சொன்ன பிறகு, சரியில்லை என்றால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். இந்தத்